[5th November 1966

(இ) மேற்படி சங்கம் மீண்டும் இயங்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : (அ) பெரும்பாக்கம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஐந்து நெறியாளர்களில் மூவர் 23—12—1964 அன்று ஒரே சமயத்தில் பதவி விலகல் கடிதம் கொடுத்தனர். அதன்பின் அவர்கள் எந்தக் கூட்டத்திற்கும் வரவில்லை. கூட்டம் நடத்தப்படுவதற்கு எஞ்சிய இரண்டு நெறியாளர்கள் நிர்வாகச் சிற்றெண் (Quorum) தேவையைப் பூர்த்தி செய்யாத காரணத்தால் மூன்று நெறியாளர்களின் பதவி விலகலை ஏற்கவும் முடியவில்லை. இடைக்கால காலியிடங்களை நிரப்பவும் முடியவில்லை. இவ்வாறு சங்கத்தின் குழு செயலற்றுப்போய் சங்கம் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

(இ) சங்கத்தின் குழு கலைக்கப்பட்டு, கூட்டுறவுச் சங்க முது நிலை ஆய்வாளர் ஒருவர் இச்சங்கத்தின் அலுவல்களைச் சீர்ப்படுத்துவதற்கென தனி அதிகாரியாக நியமிக்கப்பட்டார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அச்சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பித்த ஆணைகளுக்கெதிராக சங்கத்தின் முன்னுள் தலைவர் ரிட் மனு ஒன்றை சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். சங்கத்தைக் கலைப்பதற்குப் பிறப்பிக்கப்பட்ட ஆணை செயல்படுத்தப்படுவதை உயர் நீதி மன்றம் நிறுத்திவைத்துள்ளது. இந்த விஷயம் இப்போது நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முறைப்படி 1964-ல் தேர்தல் நடந்தது. தேர்தல் செல்லாது என்று வழக்குப் போட்டார்கள். தேர்தல் அதிகாரி மறு தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்று உத்தரவு போட்டார்கள். இப்படி 1964-ல் உத்தரவு போடப்பட்டு இருந்தும், 1966 வரைக்கும் தேர்தல் நடக்காததற்குக் காரணம் என்ன ?

கனம் சபாநாயகர் : அது தான் 'கோரம்' இல்லை என்று சொன்னர்களே.

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்ருடியார் : அந்தச் சங்கத்தின் ஐந்து நெறியாளர்களில் 3 பேர்கள் பதவி விலகல் கடிதம் கொடுத்துவிட்ட காரணத்தினல் தேர்தலை நடத்த கோரம் இல்லாது போய் இருக்கிறது. ஹைக்கோர்ட்டிலும் ரிட் மனு இருக்கிறது. ரிட் மனு தள்ளுபடி ஆகவில்லை.

* 457 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், அரக்கோணம் தாலுகாவில் உள்ள தாலுகா கூட்டுறவு சொசைட்டியின் 1963-64, 1964-65-ம் வருடங்களுக்கான கணக்குகளைத் தணிக்கை செய்த ஆடிட்டர் அவர்களிடமிருந்து ஸ்பெஷல் ரிப்போர்ட்டு ஏதேனும் பெறப்பட்டதா ?

5th November 1966]

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) ஆம்.

(இ) அரக்கோணம் தாலூகா கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963-64-ம் ஆண்டில் செயல்பட்டது குறித்து வேலூரிலுள்ள மாவட்டக் கூட்டுறவுத் தணிக்கை அதிகாரியிடமிருந்து பெறப் பட்ட தனி அறிக்கையின் மூலம் அச்சங்கத்தின் முன்னாள் செய லாளர் ஒருவர் பணம் கையாடல் செய்தார் என்றும் சங்கக் கணக்குகளில் பல குற்றங்குறைகள் இருந்தனவென்றும், மகசூல் கடன்களை வழங்குவதில் ஒழுங்கீனங்கள் இருந்தனவென்றும் தெரிந்தது. உடனடியாக அச் சங்கத்தின் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு குற்றங்குறைகள் சரிப்படுத்தப்பட்டன. சங்கத்தின் முன்னாள் செயலாளர் கையாடிய ஐயாயிரத்து நூற்று எண்பத் திரண்டு ரூபாய் தொண்ணூற்றிரண்டு காசுகள் அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டு, அவர் வேலூர், கூட்டுறவு மத்திய பாங்கியின் பணியிலிருந்து நீக்கப்பட்டார். உரிய காலத்தில் கட்டப்படாத கடன்களை வசூலிக்கச் சங்கம் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது. 1964-65-ம் ஆண்டிற்குப் பெறப்பட்ட தனி அறிக்கையைப் பொறுத்தவரையில், அதில் கண்டுள்ள ஒழுங்கீனங்கள் குறித்து ஆய்வு நடத்துமாறு ராணிப்பேட்டை கூட்டுறவுச் சங்கத் துணைப் பதிவாளர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தக் கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் முன்னாள் தலைவர் பணத்தைக் கையாடல் செய்த தாக ஒப்புக் கொண்டார். அவருக்கு கையாடல் செய்த குற்றத்திற்காக என்ன தண்டனை கொடுக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : சர்வீசில் இருந்து ரிமூவ் செய்திருக்கிறோம். இதர நடவடிக்கை களும் எடுக்கப்பட்டு வருகின்றன.

கனம் சபாநாயகர் : அவர் மீது பிராசிக்யூஷன் போடவில்லையா என்று கேட்கிறார்.

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : முதலில் டிபார்ட்மெண்டிலேயே விசாரணை நடத்துகிறார்கள். அவர்களுக் குப் போதுமான துப்பு துலங்கவில்லை என்றால் போலீசிடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால் இந்தச் சங்கத்தைப் பொறுத்த வரையில் போலீசில் கொடுக்கவில்லை. டிபார்ட்மெண்டே நடத்தும் விசாரணை முடியும் தருவாயில் இருக்கிறது.

*** 458 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலூகா, செட்டிக்குறிச்சி, எரியூர் ஆகிய ஊர்களில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் செய்யப்பட்டதாக அண்மையில் விசாரணை கள் ஏதேனும் நடைபெற்றதா ?